RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s131

OPEN ACCESS

# திருக்குறளின் அறிவுசார் நோக்கும் போக்கும்

ம. சுப்பராயன் [அ, *], த. ஜெயக்குமார் [அ]

[அ] தமிழ்த்துறை, பெரியார் மணியம்மை நிகர்நிலைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்- 613403, தமிழ்நாடு, இந்தியா

# Thirukkuralin Arivusar Nokkum Pokkum

R. Subbarayan [a, *], T. Jayakumar [a]

[a] Department of Tamil, Peiyar Maniyamai Deemed University, Thanjavur - 613403, Tamil Nadu, India

* Corresponding Author: subbarayan1956@gmail.com

Received: 04-11-2020
Revised: 15-06-2021
Accepted: 18-06-2021
Published: 21-06-2021

Check for updates

**ABSTRACT**

Thirukkural is a global public repository that is acceptable to all people of the world across country, race, language and religion. This book explains how the human race pursues many purposes for survival. The purpose of this article is to explain some of them. There is no difference in the human race by birth. They excel in the ups and downs of what they do. You just have to be more discriminating with the help you render toward other people. We must love those lives and live those lives. The best virtue is to live without jealousy, denial, anger and hatred in the mind. The people's representatives who rule the country should be understood as those who alleviate the suffering of the people, fulfill their needs and live happily. These motives are being followed by the people today and the human race is functioning better.

**Keywords:** Thirukkural, Human Race.

## முன்னுரை

திருக்குறள் நாடு, மொழி, இனம், சமயம் கடந்து, உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ள கூடிய நூலாக உள்ளது. அதனால் அந்நூல் உலகப் பொதுமறைக்களஞ்சியம் என்று போற்றப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட நூலாக இருப்பினும் இன்றும் அந்நூலின் கருத்துக்கள் உலக நடைமுறைக்கு பொருந்தக் கூடியதாகவும், பின்பற்றதக்கதாகவும் உள்ளது.

திருக்குறள் கூறும் கருத்துக்கள் பல திறத்தின. அவை அறநெறிகள், வாழ்வியல் நெறிகள், அரசியல் நெறிகள், ஒழுக்க நெறிகள், பொருளியல் நெறிகள் களவியல் நெறிகள், கற்பியல் நெறிகள் என்று வரிசைப்படுத்தக் கூடியவையாய் அமைந்திருக்கின்றன.

திருக்குறள் தோன்றியதன் நோக்கம், மக்கள் இந்தப் பூவுலகத்தில் நலமாக, வளமாக வாழவேண்டும் என்பதற்காகத்தான். இந்த வகையில் திருக்குறளின் கருத்துக்கள் மக்களிடம் பரவி அதன் நோக்கம் நிறைவேறிக் கொண்டிருப்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனும் நோக்கம்

சங்க காலத்தில் நம் தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தார்கள். இந்தியா முழுவதும் பரவி வாழ்ந்துள்ளனர். கடல் கடந்து வாணிகம் செய்து." யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயர்ந்த பண்பாட்டோடு வாழ்ந்துள்ளனர். அதன் பிறகு இந்தியாவில் குடியேறிய ஆரிய இனம் வஞ்சகச்

சூழ்ச்சியால் நம்தமிழர்களின் பண்பாட்டைச் சீரழித்தனர். நமக்குள் உயர்வு தாழ்வு கற்பித்து சாதி முறையை உண்டாக்கி, அவற்றைப் பின்பற்றும்படிச் செய்தனர். கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், பேச நாவிருந்தும் ஊமையாய், தமிழர்களின் நிலை அடக்கப்பட்டிருந்தது. அரசர்களேயாயினும் ஆரியத்தின் கட்டளைக்கு ஏற்ப செயல்படுபவராய் இருந்தனர்.

அக்காலத்தில் வாழ்ந்த திருவள்ளுவர் தமிழர்களின் இந்நிலையைக் கண்டு மனம் வெதும்புகிறார். அவர்களை இந்த அடிமைத்தனத்திலிருந்தும், இழி நிலையிலிருந்தும் நீங்க வேண்டும் என்று விரும்புகிறார். இதனை,

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்” (குறள், 972, அதிகாரம், பெருமை)

என்ற குறளின் மூலம் பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பித்தவரை கண்டிக்கும் நோக்கில் வலியுறுத்துகிறார் (Chidambaram Pilai, 2012).

அனைத்து மக்களும் தாயின் கருவரையிலிந்தே பிறக்கிறார்கள் அதனால் பிறப்பில் பேதமில்லை பிறந்தபின் அவர்கள் செய்யும் தொழில் சமுதாய முன்னேற்றம் கருதியே உள்ளதால், அதனாலும் பேதமில்லை எனக்கூறி மக்களிடயே பேதமின்மையை விளக்குகிறார். எந்தச் சாதி அமைப்பால் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதோ அதே சாதி அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் மூலம் மக்கள், கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் முன்னேறி இன்று சமத்துவமாக வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. திருவள்ளுவரால் கூறப்பட்ட இக்குறளின் நோக்கம் இன்று நிறைவேறியமைக்கு தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கார், பெருந்தலைவர் காமராசர், முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி, புரட்சித்தலைவர் எம்ஜிஆர், புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா ஆகிய தலைவர்களும், அவர்களால் இயற்றப்பட்ட சட்டங்களுமே காரணமாகும்.

## அந்தணர் என்பவர் அறவோர் எனும் நோக்கம்

வள்ளுவர் உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டு உலக உயிர்கள் இன்புற்று வாழ உதவக் கூடியவர்களைத்தான் “அந்தணர்” என்ற ஜீவகாருண்யத்தை குறிக்கும் சொல்லால் கூறுகிறார். மாறாக அந்தணர் என்ற சொல் ஒரு சாதியைக் குறிக்கும் சொல்லோ, ஒரு குறிப்பிட்ட இனத்தாரைக் குறிக்கும் சொல்லோ அல்ல என உறுதியான நோக்கத்தில் இயம்பியுள்ளார். இதனை,

“அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்

செந்தண்மை பூண்டொழுக லான்” (குறள், 30 அதிகாரம், நீத்தார்பெருமை)

என்ற குறளின் மூலம் செப்பியுள்ளதை அறியலாம். ஆனால் இன்று அந்தணர் என்ற சொல் அந்த குறிப்பிட்ட இனத்தார் தங்களைக் குறிக்கும் சொல்லாக மாற்றிக் கொண்டுவிட்டார்கள். அது நிலைபெற்றும் வருகிறது (Chidambaram Pilai, 2012).

## கொல்லாமையும், புலால் மறுத்தலும் எனும் நோக்கம்

தமிழர்கள் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி அறவாழ்க்கை வாழ்ந்து வந்தனர். பிற்காலத்தில் நம்மிடையே ஊடுருவிவிட்ட ஆரிய இனம் கொலை செய்வதையும், புலால் உண்ணுதலையும் தங்களின் பழக்கமாகவே கொண்டிருந்தனர். இதனை,

“அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற

னுயிர்செகுத் துண்ணாமை நன்று” (குறள், 259, அதிகாரம், புலால் மறுத்தல்)

என்ற குறளின் மூலம் திருவள்ளுவர் இவற்றைக் கண்டிக்கிறார் என்பதை நம்மால் அறியமுடிகிறது (Chidambaram Pilai, 2012). கொல்லாமை நோன்பையும், புலால் உண்ணாமையும் வழக்கமாகக் கொண்டிருந்த திராவிடர்களை - தமிழர்களை சண்டாளர்கள் என்றும், அரக்கர்கள் என்றும்,

சூத்திரர்கள் என்றும் ஆரியர்கள் வகைப்பாடினர். இன்று பெருகிவரும் மக்களின் உணவுத்தேவைக்காக புலால் உண்ணுதல் அவசியமானதொன்றாக அமைந்துவிட்டது. இங்கு வள்ளுவரின் புலால் உண்ணாமையும், கொல்லாமையும் என்ற நோக்கம் ஒரு பகுதி அளவிலேயே நிறைவேறி உள்ளது.

## வாழுங்காலத்தே நல்வினைகள் செய்ய வேண்டும் எனும் நோக்கம்

தன்னை நேசிப்பதுபோல் பிற உயிர்களையும் நேசிக்க வேண்டும். அவ்வுயிர்கட்கு நல்வினைகளைச் செய்து அவை குமுகாயமாக வாழ உதவ வேண்டும். அதுவும் நல்ல உடல் நலத்துடன் இருக்கும் காலத்திலேயே செய்ய வேண்டும். அதாவது முதுமை நம்மை அடையாமுன் செய்ய வேண்டும் என்பது திருவள்ளுவரின் நோக்கமாகும். இதனை,

“நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை

மேற்சென்று செய்யப் படும்” (குறள், 335, அதிகாரம், நிலையாமை) எனக் கூறியதிலிருந்து இதனை அறியக்காணலாம் (Devaneya Pavanar, 2012).

பிறந்தவர் அனைவரும் ஒருநாள் இறப்பது உறுதி. நம்முடைய குறிக்கோள் நன்மை பயப்பதை மையமாகக் கொண்டு, அக்குறிக்கோளை நிறைவேற்ற செயல்படுத்தும் அறிவு, அக்குறிக்கோள் இனிதாக அமைய அன்புசெலுத்தும் தன்மை, இவை காரணமாக நம்முடைய வாழ்நாள் நீளும். இப்படியாக உள்ள நம் வாழ்க்கையில் நல்வினைகள் குடும்பம் சார்ந்தும், சமூகம் சார்ந்தும், நிகழ்த்தப்படுதல் அவசியமாகும். திருவள்ளுவரின் இந்நோக்கம் உலகத்தின் பல்வேறு இடங்களில் நிகழ்ந்த வண்ணமாகவே உள்ளது. அதனால்தான் உலகம் இன்றும் நிலைபெற்று இயங்கி வருகிறது.

## மனத்துக்கண் மாசு இல்லாமை எனும் நோக்கம்

திருவள்ளுவர் மனித மனத்தின்கண் குற்றம் இருத்தல் கூடாது என்கிறார். ஏனெனில் பொறாமை, புறங்கூறும் தன்மை, கோபம், வெறுப்பு, சலிப்பு போன்றவை தோன்ற நிலைக்களனாக இருப்பது மனமாகும். இவை நீங்கிய மனத்தைப் பெறுவதே அறமாகும். அப்படிப்பட்ட மனத்தில் அன்பு தோன்றும், கருணை தோன்றும், பிறருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் தோன்றும், உலகத்து மக்களை ஒன்றுபோல் மதிக்கத்தோன்றும். இதனை “மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்” என்ற கூற்றின் மூலமும் அறியலாம்.

மனம் செம்மையாவதைத் தவிர்த்து, செய்யக்கூடியவெல்லாம் புகழ்ச்சிக்காகவும், செல்வாக்கிற்காகவும் செய்யப்படுவனவே ஆகும். அவை அறத்தின் பாற்பட்டவை அல்ல எனத் திருவள்ளுவர்,

“மனத்துக்கண் மாசில னாவ தனைத்தர

னாகுல நீர பிற” (குறள், 34, அதிகாரம், அறன் வலியுறுத்தல்)

என்ற குறளின் மூலம் வலியுறுத்துவதை அறியலாம். ஆகையால் மக்களிடையே மனத்தில் மாசு இல்லாத தன்மை நிலவவேண்டும். இதனால் ஒவ்வொருவரும் இன்பமாக வாழ்ந்து சமுதாயமும் முன்னேறும் நிலை ஏற்படும் என அறியலாம் (Veeramani, 2015).

## மன்னவன் கோல்நோக்கி வாழும்குடி எனும் நோக்கம்

மக்கள், அரசின் முன்யோசனை இல்லாத திட்டங்களால் அடிப்படைத் தேவைகளுக்கே அல்லலுறுவார்கள். தங்களுடைய வாழ்வுக்கு உறுதிபாடு, இல்லாத நிலையை அடைவார்கள்: இதனால் மக்களின் வளமைக்காகவும், மகிழ்ச்சிக்காவும் செயல்படவேண்டிய அரசு மக்களின் அழிவிற்கும் துன்பத்திற்கும் காரணமாக அமைந்துவிடும். ஆகையால் அரசானது மக்கள் பாதுகாப்புடனும் இன்பத்துடனும் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுவது அவசியமானதாகும்.

நாட்டை ஆளும் அரசன் வேண்டியவர், வேண்டாதவர் என்று பார்க்காமல் அனைவருக்கும் பெய்யும் மழையைப்போல, அனைத்து மக்களின் நலன்களைப் பேணுபவனாக விளங்கவேண்டும் என்பது வள்ளுவரின் நோக்கமாகும். இதனைத் திருவள்ளுவர்

"வான்நோக்கி வாழும் உலகுஎல்லாம் மன்னவன்

கோல்நோக்கி வாழும் குடி" (குறள், 542, அதிகாரம், செங்கோன்மை)

என்ற குறளில் நவின்றுள்ளதை அறியலாம் (Shanmugasundaram, 1998).

ஊழையும் உட்பக்கம் காண்பர் எனும் நோக்கம்

ஊழ் என்பதாக எதுவுமில்லை. முயற்சியும் பயிற்சியும் நிறைந்த ஒருவர் உறுதியுடன் செயல்படுவாரானால் அவரால் செய்ய முடியாத செயல் என்று எதுவுமில்லை என்று வள்ளுவர்,

"தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்

மெய்வருத்தக் கூலி தரும்" (குறள், 619 அதிகாரம், ஆள்வினையுடைமை)

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்

தாழாது உஞற்று பவர்" (குறள், 620 அதிகாரம், ஆள்வினையுடைமை) என்ற குறள்களால் அறியமுடிகிறது (Puliyur Kesigan, 2016, 2009).

திருவள்ளுவர் ஊழ் என்பதை ஒருவனின் இயற்கைக்குணம், பிறவிக்குணம், ஜென்மக்குணம் என்பதாகத்தான் கொள்கிறார். மாறாக முன் ஜென்மத்தில் அச்சீவன் செய்த கர்மத்திற்கு ஏற்ற விதி என்றும், அது தவறாமல் நடந்தே தீரும் என்றும், அவர் கருதி இருப்பாரேயானால், "ஊழ்" என்ற ஓர் அதிகாரத்தை மட்டும் பாடிவிட்டுப் பேசாமல் தனது கடமையை முடித்துக்கொண்டிருப்பார். அன்றியும் தலைவிதி முன்ஜென்ம கர்மபலன்களின்படியேதான் மனித வாழ்வின் சம்பவங்கள் என்பதும் முடிவானால், மற்ற நீதிகள், வழிபடுதல், வழிமுறைகள், கற்பித்தல்கள், மனித அறிவுப் பெருமை, சுதந்திரம் முதலியவைகள் பற்றிக் கூறுவது பயனில்லவேயாகும். ஆகையால் ஊழுக்கு விதி, முன்ஜென்ம கர்மபலன் என்று கருத்துக் கூறுகிறவர்கள் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியவராகிறார்கள். இன்று ஊழ்பற்றிய வள்ளுவரின் நோக்கம் சிறப்புடையதாக இருக்கிறது: அதன் போக்கு தாமஸ் ஆல்வா எடிசன், சர் ஐசக் நியூட்டன், ஜி.டி. நாயுடு, ஆகிய விஞ்ஞானிகளையும் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கார், போன்ற சீர்திருத்தவாதிகளையும், முத்தமிழறிஞர் கலைஞர், புரட்சித்தலைவர் எம்.ஜி. ஆர், புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா, போன்ற அரசியல் தலைவர்களையும் மிக உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. ஊழ் பற்றிய திருக்குறளின் நோக்கம் சமூகத்தின் பெரும்பான்மை மக்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதை ஓர் தீர்மானமாக கொண்டு செயல்பட்டால் மக்களின் வாழ்க்கை நிலை உயரும் என்பதில் ஐயமில்லை.

## முடிவுரை

திருவள்ளுவரின் வாழ்வியல் நூலான திருக்குறள் சமத்துவம், உயர்ந்த நெறிகளைக் கொண்டிருத்தல், கொல்லாமை, புலால் உண்ணாமை, இளமைக்காலத்தே நல்வினைகள் செய்தல், மனத்தில் மாசு இல்லாமை, தலைவிதி, முன்ஜென்ம கர்மபலன் எனும் மூடநம்பிக்கைகள் ஒழிப்பு, போன்ற நல்ல நோக்கங்களைக் கொண்டுள்ளது. இந்நோக்கங்களை நிறைவேற்றும் முகத்தான் திருக்குறளின் கருத்துகளை மக்கள் பின்பற்றி நடந்து நல்வாழ்வு வாழ வேண்டும் எனக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

## References

Chidambaram Pilai, V. O., (2012) Thirukkural VOC Chithambaranar Urai, VOC Library, Chennai, India.

Devaneya Pavanar, G., (2012) Thirukkural - Tamil Maraburai, Poompuhar Pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

Puliyur Kesigan, (2016) Thirukkural Parimelazhagar Urai, Poompuhar Pathippagam, Chennai, India.

Shanmugasundaram, Su., (1998) Thirukkural Kaavya Urai, kavya pathippagam, Chennai, India.

Veeramani, K., (2015) Periyar kalanjiyam, Periyar Suyamariyathai Pirachara Niruvanam veliyedu, Chennai, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License